**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 25 May 2017

சிங்கப்பூருக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு பற்றி துணைப் பிரதமர் டியோ

# வேறுபாடுகளைவிட பொது ஈடுபாடுகளே அதிகம்

அமைதியான, வளர்ச்சிகாணும் வட்டாரத்தை உருவாக்குவதில் சிங்கப்பூரும் சீனாவும் கொண்டு உள்ள பொதுவான ஈடுபாடு, இரு நாடுகளுக்குமிடையில் அவ்வப்போது எழக்கூடிய கருத்து வேறுபாடுகளைவிட அதிகம் என்று துணைப் பிரதமர் டியோ சீ ஹியன் நேற்று கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையில் பரந்த, நீண்டகால உறவு நிலவுவதோடு, பெரும்பாலான விவகாரங்களில் ஒருமித்த கருத்துகள் இருப்பதாகவும் பொதுவான ஈடுபாடுகளில் ஒன்றுசேர்ந்து சிறப்பாகச் செயல்பட்டிருப்பதாகவும் திரு டியோ கூறினார்.

“நாடுகளின் அளவும், வரலாறு, பலவீனங்கள், புவியியல் அமைவிடம் போன்றவையும் வெவ்வேறாக இருக்கும் நிலையில், நெருங்கிய அண்டைவீட்டார்களுக்கும் நண்பர்களுக்கும் இடையிலும் கூட சில விவகாரங்களில் மாறுபட்ட கருத்துகள் இருக்கக்கூடும்,” என்றார் தேசிய பாதுகாப்பு ஒருங்கிணைப்பு அமைச்சருமான திரு டியோ.

“உருமாறிவரும் உலகளாவிய சூழ்நிலையில் சீனா” என்ற தலைப்பிலான பொது கருத்தரங்கில் அவர் பேசினார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் கிழக்காசிய ஆய்வுக் கழகம் அதன் 20வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தக் கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்தது.

சிங்கப்பூரும் சீனாவும் அடிப்படையில் தத்தம் நாடுகள் மற்றும் வட்டாரத்தின் அமைதியான வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் பொதுவான ஈடுபாடு கொண்டு உள்ளன, இதில் எந்த மாற்றமும் இல்லை என்றார் திரு டியோ.

“சீனாவின் அமைதியான வளர்ச்சிக்கும் ஆக்ககரமான முனைப்புகளுக்கும் சிங்கப்பூர் தொடர்ந்து வலுவான, கொள்கையளவிலான ஆதரவாளராக இருக்கும்,” என்றார் திரு டியோ.

சென்ற வாரம் பெய்ஜிங்கில் நடைபெற்ற “ஒரே பகுதி, ஒரே சாலை” உச்சநிலை மாநாட்டில் பிரதமர் லீ சியன் லூங் கலந்துகொள்ளாததற்கு சிங்கப்பூருக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்டுள்ள பிரச்சினையே காரணம் என செய்தி அறிக்கைகள் ஊடகங்கள் வெளியிட்டதைத் தொடர்ந்து திரு டியோ இவ்வாறு கூறியுள்ளார். அந்த உச்சநிலை மாநாட்டில் தேசிய வளர்ச்சி அமைச்சரும் இரண்டாம் நிதி அமைச்சருமான லாரன்ஸ் வோங் சிங்கப்பூரைப் பிரதிநிதித்தார்.

கருத்தரங்கு பற்றி கருத்துரைத்த திரு டியோ, “இரு நாடுகளுக்கும் இடையிலான பொதுவான ஈடுபாடுகள் குறித்து பலதரப்பட்ட கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இரு நாடுகளுக்கும் இடையில் அதிக பரஸ்பர நம்பிக்கை நிலவுவதையும், ஒருவர் மற்றவரின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ள பரஸ்பர விருப்பம் கொண்டிருப்பதையும் இதுபோன்ற கலந்துரையாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன,” என்றார்.

இந்தக் கருத்தரங்கு தனித்துவமிக்க கலந்துரையாடல் என்றும் அவர் குறிப்பிட்டார். இதுபோல வேறு எந்த நாட்டுடனும் சிங்கப்பூர் கருத்தரங்கு நடத்துவதில்லை.

சீனா உற்பத்தித்திறன்மிக்க பொருளியல் நாடாக உருவாகும் என சிங்கப்பூர் நம்பிக்கை கொண்டுள்ளது. ஏனெனில், சீனா செழிப்பாகவும் நிலையாகவும் இருந்தால் இந்த வட்டாரமும் உலகமும் பயனடையும் என்றார் திரு டியோ.

அனைத்துலக அரங்கிலும் சீனா அதிக குறிப்பிடத்தக்க பங்காற்றுகிறது. பல்வேறு வட்டாரங்களிலுள்ள நாடுகளை இணைக்கும் இரு முக்கிய திட்டங்களைச் சீனா அறிமுகப்படுத்துகிறது: “ஒரே பகுதி ஒரே சாலை” எனப்படும் அடிப்படை வசதிகள் கட்டமைப்பு அவற்றுள் ஒன்று, வர்த்தகப் பாதைகளின் நெடுகில் அடிப்படை வசதிகளை அமைப்பதற்கு நிதியளிக்கும் ஆசிய அடிப்படை வசதிகள் முதலீட்டு வங்கி மற்றொன்று.

இரு திட்டங்களையும் சிங்கப்பூர் ஆதரிப்பதாக திரு டியோ கூறினார். பொருளியல் ஒருங்கிணைப்பையும் அடிப்படை வசதிகளின் மேம்பாட்டையும் இத்திட்டங்கள் ஊக்குவிக்கும் என்றார் அவர். தைவான், ஹாங்காங் தொடர்பில் சிங்கப்பூரின் நிலையையும் திரு டியோ மீண்டும் எடுத்துரைத்தார்.

“ஒரே சீனா கொள்கையை சிங்கப்பூர் எப்போதும் நிலைநாட்டி வந்துள்ளது,” என்றார் அவர். இரு தரப்புகளுக்கும் சிங்கப்பூர் பழைய நண்பர் என்றும் அமைதியான, நிலையான முறையில் உறவுமுறை மேம்படுவதற்கு சிங்கப்பூர் தொடர்ந்து ஆதரவளிக்கும்.

“அண்மையில் புதிய தலைமை நிர்வாகியைத் தேர்ந்தெடுத்த ஹாங்காங்கின் ‘ஒரே நாடு, இரு நிர்வாகங்கள்’ சட்டமைப்பு அதன் நிலைத்தன்மைக்கும் செழிப்புக்கும் சிறந்தது.

“ஹாங்காங் சிறந்து விளங்க வாழ்த்துகிறோம். ஹாங்காங்குடன் பங்காளித்துவங்களையும் பரிமாற்றங்களையும் நாங்கள் தொடர்ந்து நாடுவோம்,” என்றும் அவர் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.